# கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணி கௌரவ பட்டக் கற்கைநெறி, ஆண்டு I பரீட்சை

## 2ஆம் தவணை - இறுதிப் பரீட்சை – 2023

## LAW 12404 – ஒப்பந்தச் சட்டம்

(2 மணித்தியாலங்கள் மற்றும் 15 நிமிடங்கள்)

மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 04

ஏதேனும் இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. (அ), (ஆ) மற்றும் (இ) பகுதிகளுக்கு விடையளிக்க.

பழங்காலப் பெட்டியொன்றினை ரூ.100,000/- இற்கு விற்பதாக நிலு என்பவள் பத்திரிக்கையில் டிசெம்பர் 5, 2023 அன்று விளம்பரமொன்றைச் செய்தாள். இதற்கு பதிலளிக்கும் வகையில் அன்றைய தினமே வழங்கப்பட்டிருந்த இலக்கத்திற்கு தொலைபேசி அழைப்பு மேற்கொண்ட மாலி என்பவள் அப் பெட்டியினை ரூ.80,000/- பணமாகச் செலுத்தியும் ரூ.20,000/- பெறுமதியுடையதென அவள் கூறிய பழங்காலக் குவளை ஒன்றினை வழங்கியும் தான் கொள்வனவு செய்ய விரும்புவதாகத் தெரிவித்தாள். இவ் அழைப்பானது நிலுவினுடைய காரியதரிசி அமில என்பவனால் பதிலளிக்கப்பட்டதுடன் மாலி குறிப்பிட்டதற்கு அவன் உடன்பட்டான். விவரங்களை பூரணப்படுத்தி, அவளது இலத்திரனியல் கையொப்பத்தினை அவ் ஆவணத்தில் இட்டு அதனை மின்னஞ்சல் வழியாக திருப்பி அனுப்புமாறு கோரி வரைவு ஒப்பந்தத்தினை அமில மின்னஞ்சல் மூலமாக மாலிக்கு அனுப்பினான். அவளது மின்னஞ்சல் கணக்கில் சில பிரச்சினைகள் காணப்பட்டமையால் மாலி அவ் ஒப்பந்தத்தினை அச்சிட்டு அதில் கையொப்பமிட்டு, அவளது தொலைபேசி மூலமாக அதனை ஊடுகதிர் படமெடுத்து (scan) WhatsApp மூலமாக டிசம்பர் 7 அன்று அமிலவிற்கு அனுப்பினாள். அது விநியோகிக்கப்பட்டதாக

அறிவிப்பொன்றை அவள் பெற்றாள். இருப்பினும், அமில அச் செய்திகளை வாசிப்பதற்கு முன்னதாகவே அவன் அவனுடைய தொலைபேசியினை இழந்தான் என்பதுடன், டிசம்பர் 10 அன்றே அதனை பதிலீடு செய்ய முடிந்தது. அதேவேளை, அப் பத்திரிக்கை விளம்பரத்தினைப் பார்த்த பிரவீனா என்பவள் டிசம்பர் 8 அன்று நிலுவினைத் தொடர்பு கொண்டதுடன், அப் பெட்டியினை ரூ.100,000/- இற்கு கொள்வனவு செய்வதற்கு இணங்குவதாகக் குறிப்பிட்டாள். இவ் வேளையில், மாலியிடமிருந்து நிலு எத் தகவலையும் பெறவில்லை என்பதனால், அப் பெட்டியினை பிரவீனாவிற்கு விற்பதற்கு நிலு உடன்பட்டாள். பிரவீனா நிலுவினுடைய நண்பியொருத்தி என்பதனால் அவள் டிசம்பர் 9 அன்று பணத்தினை நிலுவினுடைய வீட்டில் சென்று கொடுத்தாள்.

(அ) கொடைமுனைவு மற்றும் ஏற்பு என்பவற்றின் அம்சங்களில் கவனம் செலுத்தி, அப் பெட்டியை விற்பதற்கு வலிதான ஒப்பந்தமொன்று காணப்படுகின்றதா எனவும் யாருடன் காணப்படுகின்றதெனவும் ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) ரூ. 20,000/- இற்கு பதிலாக மாலி அவளுக்கு வழங்கவிருந்த குவளையானது விரிசலடைந்திருந்தமையும் அதற்கு எந்தப் பெறுமதியும் இல்லை என்பதையும் நிலு கண்டறிந்தாள். அது தற்போதும் வலிதான பிரதிபயனொன்றின் பாகமாக முடியுமா என்பதனை தீர்க்கப்பட்ட வழக்குகளின் பின்னணியில் ஆராய்க.

(10 புள்ளிகள்)

(இ) இலத்திரனியல் வர்த்தகத்தில் ஏற்பினைத் தொடர்பாடல் செய்வதில் தபால் விதியின் ஏற்புடைமை அல்லது ஏற்புடைமை செய்யப்படாமை தொடர்பில் மேற்போந்த சூழ்நிலையின் நிகழ்வுகளின் பின்னணியில் ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம்: 30 புள்ளிகள்)

2. இருபத்தைந்து கச்சேரிக்கான ஆடைகளைத் தைப்பதற்கு ‘WJ Tailors’ என்பதுடன் உடன்படிக்கையொன்றில் ரமணி என்பவள் ஈடுபட்டாள். உடன்படிக்கையில் நுழைகையில் முற்பணமாக ரூ. 75,000 இனை ரமணி செலுத்தியதுடன், மிகுதிப் பணமான ரூ. 250,000

ஆனது ஒப்படைப்புச் செய்யும் நேரத்தில் செலுத்தப்பட வேண்டியிருந்தது. குறித்த ஆடைகள் ரமணியின் வசிப்பிடத்தில் 20 டிசம்பர் 2023 அன்று வியாபார தினம் முடிவடைவதற்கு முன்பு ஒப்படைப்புச் செய்யப்பட அட்டவணையிடப்பட்டிருந்தது. ரமணி துணியினை வழங்கியிருந்ததுடன் 15 நவம்பர் 2023 அன்று அல்லது அதற்கு முன்னதாக கச்சேரி பங்கேற்பாளர்களிடமிருந்து ஆடைக்கான அளவீடுகளைப் பெறுவதற்கு 'WJ Tailors' இற்கு அழைப்பு விடுத்திருந்தாள். 20 டிசம்பர் 2023 இல் WJ Tailors இனால் தையலைப் பூரணப்படுத்த முடியவில்லை என்பதுடன் ஒப்படைப்பானது 22 டிசம்பர் 2023 அன்று பி. ப. 9 மணியளவில் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. அடுத்த நாள், கச்சேரியின் போது, 'WJ Tailors' ஆனது ரமணி வழங்கியதிலிருந்து வேறுபட்டதொரு துணியினைக் கலப்படம் செய்துள்ளமையினையும் ஆறு ஆடைகள் பங்கேற்பாளர்கள் மீது சரியாகப் பொருந்தவில்லை என்பதையும் ரமணி அவதானித்தாள். குறித்த ஆடைகள் சரியான நேரத்தில் ஒப்படைப்புச் செய்யப்பட்டிருப்பின் பங்கேற்பாளர்களுடன் அவள் ஒத்திகை அமர்வொன்றினைச் செய்திருக்க முடிந்திருக்குமென ரமணி கருதினாள். 'WJ Tailors' இற்கு ரமணி மிகுதிப் பணத்தினைச் செலுத்த மறுத்து அவளது அதிருப்தியினை வெளிப்படுத்திய போது, குறித்த தாமதமானது ரமணியினால் வழங்கப்பட்டிருந்த துணியானது வித்தியாசமானதொரு தன்மையினைக் கொண்டிருந்தமையால் அதைத் தைப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட மேலதிக வேலை நேரத்தின் காரணமாகவே எழுந்தது என 'WJ Tailors' கோரியது.

உமது சட்ட ஆலோசனையை ரமணி நாடுகிறாள். ஒப்பந்த வாசகங்களுடன் தொடர்புடைய சட்டத்தின் மீது கவனம் செலுத்தி அவளுக்கு ஆலோசனை வழங்குக.

(30 புள்ளிகள்)

3. 'நிலைகுலைவுக் கோட்பாட்டினை' பொருள்கோடல் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட 'பல காரணி அணுகுமுறையானது' சமகால சூழலின் சிக்கலான சூழ்நிலைகளை உள்ளடக்கும் வகையில் அதன் பரப்பெல்லையினை விரிவாக்கியுள்ளது.

மேற்போந்த கூற்றினை சட்ட அதிகாரங்களின் பின்னணியில் நுணுக்கமாக ஆராய்க.

(30 புள்ளிகள்)

4. (அ), (ஆ) மற்றும் (இ) பகுதிகளுக்கு விடையளிக்க.

(அ) ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்யும் காரணியொன்றாக முறையற்ற செல்வாக்கு அவசியமற்றதென்று கருதுகின்ற அளவிற்கான அதனுடைய தொடக்க கால குறுகிய பரப்பெல்லையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்யும் காரணியொன்றாக அச்சுறுத்தல் அதன் பரப்பெல்லையினை விரிவுபடுத்தியுள்ளது. ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்யும் காரணிகளான அச்சுறுத்தல் மற்றும் முறையற்ற செல்வாக்கு என்பவற்றை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் இக் கூற்றினை ஆராய்க. உமது விடையினை தீர்க்கப்பட்ட வழக்குகள் மூலம் ஆதாரப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்யும் காரணியான பிழையின் கீழ் உடன்படிக்கை உருவாக்கத்தை தடுக்கும் தவறுகள் மற்றும் உடன்படிக்கையை வெறிதாக்கக்கூடிய தவறுகள் என்பவற்றை ஒப்பிட்டு மற்றும் வேறுபடுத்துவதன் மூலம் விளக்குக. உமது விடையினை தீர்க்கப்பட்ட வழக்குகள் மூலம் ஆதாரப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(இ) ஒப்பந்தமொன்றை வலுவிழக்கச் செய்வதற்கு பிறழ்பகர்வுக் கோரிக்கையொன்றில் வெற்றியடைவதற்கென எண்பிக்கப்பட வேண்டியதான அம்சங்கள் தொடர்பில் ஆராய்க. உமது விடையினை தீர்க்கப்பட்ட வழக்குகள் மூலம் ஆதாரப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(மொத்தம்: 30 புள்ளிகள்)

**********